## பிரமாண்ட மேதின ஊர்வலம் பாரீர்!

## முன்னேறும் எமது போராட்டம்


# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 30 | ஏப்ரல், 4, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


# ஈழத்து புரட்சிகர அணிகளின் கூட்டு நடவடிக்கை

**கூட்டுத் தொழிற் சங்கக் கமிட்டி ஐக்கிய மே தினக் கூட்டத்திற்கு இணங்கத் தவறிவிட்ட பின், முன்காணுத முறையில் மிகப் பிரமாண்ட மேதின ஊர்வலத்தை இவ்வருடம் நடாத்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம் ஆகியன இப்போது திட்டம் தீட்டி வருகின்றன.**

ஓர் கூட்டுமேதினக் கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. மேதினக் கொண்டாட்டங்களுக்கான திட்டங்களை விவாதிக்க சி. டி. யூ. எப் பிலுள்ள சகல பெக்டரிக் கமிட்டிகளினதும் முதல் கூட்டம் மார்ச் 31-ம் திகதி நடைபெற்றது.

குறைந்தது 15,000 பேர் கொண்ட ஊர்வலத்தை நடத்தவும், அதனை முன் என்றும் இல்லாத முறையில் சிறந்த தாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

21 கோரிக்கைகளை வென்றெடுக்கும் போராட்டத்தை மேலும் ஓரடி முன்னெடுத்துச் செல்லவும், இன்றைய அரசியல் நெருக்கடியிலிருந்து மீளத் தொழிலாளி வர்க்கத்திற்கு ஓர் புரட்சிகரத் தலைமையைத் தருவதுமே இவ்வாண்டு மேதினத்தின் முக்கியத்துவமாகும்.

இவ்வாண்டு ஒரு ஐக்கிய மேதினக் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவதற்கு கூட்டுத் தொழிற்சங்க கமிட்டியை இணங்கச் செய்யப் பல தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் ஏப்ரல் 1-ம் திகதி நடந்த கூட்டுக்கமிட்டிக் கூட்டத்தில் முயன்றனர்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்ட தொழிற் சங்கங்கள் பிடிவாதமாக இதற்கு மறுத்து விட்டதால் இம் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன.

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் நேரடித் தொடர்புள்ள தொழிற்சங்கங்கள் கூட்டுத் தொழிற் சங்கக் கமிட்டி பங்கு பற்ருத தன் சொந்தக் கூட்டத்தைஇடதுசாரி ஐக்கிய முன்னணி நடத்த வேண்டுமெனப் பிடிவாதம் செய்ததே இதற்குக் காரணமாகும்.

### அவுஸ்திரேலியா மாக்ஸிஸ-லெனினிஸ்டுகளின்

## கட்சி மாநாடு

### புதிய மத்தியக் கமிட்டி தெரிவு

அவுஸ்திரேலிய நாட்டு மாக்ஸிஸ—லெனினிஸ்டுகள் அண்மையில் மாநாடு கூட்டி பூரணமான விவாதத்தின் பின் ஆரன்ஸ், டிக்சன், சாக்கி ஆகியவர்களின் தலைமையை நிராகரித்து, அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் இயக்கத்தை அவுஸ்திரேலிய (மார்க்ஸிஸ—லெனினிஸ) கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரில் சீர் திருத்தி அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.

தோழர்கள் இ. எப். ஹில் (தலைவர்), எல். எல். ஓசி, பி. மலோன் (உப-தலைவர்கள்), எப். ஜோன்சன் (செயலாளர்) ஆகியவர்களை உள்ளடக்கிய மத்தியக் கமிட்டி ஒன்றை மாநாடு தெரிவுசெய்தது.

## சிதைந்து சீரழியும் சீர்குலைவாளர்

கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் மூன்றேமூன்றுபேர்களைக் கொண்ட திரிபுவாதிகள் கிளைக் கூட்டம் (?) சமீபத்தில் கூடிய பொழுது தோழர் டபிள்யூ. ஏ. தர்மதாஸாவை உடனே கிளையை விட்டு விலக்கவேண்டும் என பண்டிதா உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதைக் கண்ட அவர்கள், தர்மதாஸ எங்களுக்கு எதுவித தவறும் செய்யவில்லை. அவரை நாம்விலக்கமாட்டோம் எனத் திருப்பி எழுதினர்.

பண்டிதா தனது விசேஷ அதிகார பலத்தால் அக்கிளையைக் கலைத்துள்ளார்.

இச்சம்பவம் தமது நடவடிக்கை மூலமே சவக்குழி செல்லும் திரிபுவாத சீர்குலைவுக் கும்பலின் நிலைமையை அம்பலப்படுத்துகின்றது.

### தலையங்கம்

## மாபெரும் துரோகம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இடதுசாரி சார்பான சக்திகளுடன் ஒத்துழைக்க இடதுசாரி ஐக்கிய முன்னணி உறுதியளித்துள்ளது, இடதுசாரி இயக்கத்துக்குத் தலைவர்கள் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

இடதுசாரி ஐக்கிய முன்னணி தொழிலாள வர்க்கத்துக்குத் துரோகம் செய்துள்ளது. எதிர்பார்த்ததிலும் மோசமாக, கூடிய விரைவில் அதன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

வலதுசாரி சக்திகள் புத்துயிர் பெறுவதைத் தடுப்பதென்ற சாக்கில், தொழிலாள வர்க்கப் போராட்டங்களை ஈவிரக்கமின்றி நசுக்கி கடுமையான சம்பள உயர்வு நிறுத்தக் கொள்கையைக் கடைப்பிடித்து, வாழ்க்கைச் செலவு உயர்வதற்குப் பெரும் வழி வகுத்த தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி முண்டு கொடுக்க முன் வந்துள்ளது.

இது சந்தர்ப்பவாதம் மட்டுமல்ல, படு பாதகமான துரோகச் செயலாகும்.

மந்திரிப் பதவியைக் கண்டதும் முன்னணியின் தலைவர்கள் ஒருவரை ஒருவர் கலந்தாலோசியாமலும், ஒருவருக்கு ஒருவர் மறைந்தும், பாய்ந்து விழுந்து அலரி மாளிகைக்கு ஓடுகின்றனர். இடதுசாரி ஐக்கியமுன்னணி சரியான கொள்கை அடிப்படையில் அமையவில்லை என்ற எமது குற்றச்சாட்டு இதனுல் தெளிவாகியுள்ளது.

ஐக்கியத்தின் விரோதிகள் என்று எம்மீது அவதூறு பொழிந்தவர்கள் இன்று அம்பலமாகி நிற்கின்றுர்கள்.

ஐக்கியதேசியக் கட்சி புத்துயிர் பெற்றெழும் ஆபத்து எப்பொழுதும் இருக்கின்றது. ஆனுல் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பதன் மூலம் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார அடிப்படையைத் தகர்ப்பதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதனைச் செய்யத் தவறிவிட்டது. தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் அமைந்த அரசாங்கமே இதனைச் சாதனையில் ஆக்கமுடியும். வலதுசாரிகளிலிருந்து எழும் ஆபத்தை நீக்க முடியும்.

இன்றைய அரசியல் நெருக்கடி உண்மையில் பாராளுமன்ற ஜனநாயகத்தின் நெருக்கடி, பாராளுமன்ற அமைப்புக்குள் இந்நிலைக்கு முடிவுகாண முடியாது.

இன்னுமொரு பொதுத் தேர்தல் ஏற்பட்டாலும் இந் நெருக்கடி தொடரும். பாராளுமன்றத்தைக் கலந்தாலோசியாமலே அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப் பட்டதும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும், பாராளுமன்றத்தின் உதவி இல்லாமலே நாட்டின் ஆட்சி இன்று நடைபெறுவதும், அதிகாரம் பாராளுமன்றத்தில் இல்லை; வெளியிலேயே இருக்கின்றது என்ற எமது கருத்தைத் தெளிய வைக்கின்றது.

இந் நெருக்கடிக்கு முடிவுகாண பாராளுமன்றத்துக்கு புறம்பான பாதையில் செயல்பட, தொழிலாள வர்க்கம் ஒற்றுமைப் பட்டு, அதன் தலைமையில் விவசாய வர்க்கத்துடனும், மற்றும் முற்போக்கு சக்திகளுடனும் ஒன்றிணைதல் வேண்டும்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் தொழிலாள வர்க்க இயக்கத்துக்குத் துரோகம் செய்யும் இக் காலகட்டத்தில் தொழிலாள இயக்கத்தில் உள்ள புரட்சிகர சக்திகள் ஒற்றுமை கண்டு தொழிலாள வர்க்கத்துக்குத் தலைமையளித்தல் வேண்டும். சீர்திருத்தவாத, திரிபுவாதத் தலைவர்களைத் தூக்கியெறிதல் வேண்டும். சோஷலிஸத்தை அடைவதற்கான புரட்சிகர முன்னணியாக இடதுசாரி ஐக்கியமுன்னணி அமைதல் வேண்டும்.

# ஆசிய ஆபிரிக்க மாநாட்டை சீர்குலைக்க மோசடி

# முறைகெட்ட திரிபுவாதிகளின் கூட்டுச்சதி

அல்ஜீரியாவில் கடந்த வாரம் நடந்த ஆசிய-ஆபிரிக்கா உறுதிப்பாடு சங்க மகாநாட்டைப் பிளவுபடுத்த அல்ஜீரியாவிற்குச் சென்ற திரிபுவாதி டாக்டர் விக்கிரமசிங்காவின் மகள், சூரியா விக்கிரமசிங்கா விற்குப் பயணச் செலவு தந்தது யார்?

இப்பயணம் இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகராலயத்தின் மூலம் சோவியத் ஆசிய-ஆபிரிக்க உறுதிப்பாடு சங்கத்தால் வளங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. பத்திரிகைகள் இதனைப் பிரசுரித்ததற்கு மறுப்பு எதுவும் வரவில்லை.

சூரியா விக்கிரமசிங்கா அல்ஜீரிய மகாநாட்டிற்கு முறைகேடாகச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் சென்ருர்.

## செயல் கமிட்டியின் தெரிவு

இலங்கை ஆசிய-ஆபிரிக்க உறுதிப்பாடு சங்கத்தின் பிரதிநிதிகள் மூவர் சங்கச் செயல் கமிட்டியினுல் தெரிவு செய்யப்பட்டனர். திரிபுவாத டாக்டர் விக்கிரமசிங்கா, கெனமன் ஆகியோரும் திரு அஸீஸ் அவர்களும் கமிட்டியின் அக் கூட்டத்திலும், பிரதிநிதிகள் தெரிவிலும் கலந்து கொண்டனர். தாம் விரும்பியவர் தெரிவு செய்யப்படாமல் பெரும்பான்மை முடிவால் வேறு மூவர் தெரிவுசெய்யப்பட்டதும் கூட்டத்திலிருந்து 'வெளி நடப்புச் செய்தனர். பங்கு பற்றிப் போட்டியிட்டுத் தோற்றபின் வெளிநடப்புச் செய்தவர்கள் பின்னர் கமிட்டி சட்டரீதியானதல்ல, ஆகவே கூட்டமும் பிரதிநிதிகள் தெரிவும் செல்லுபடியாகாதவை என அறிக்கை விட்டு புரளி செய்தனர்.

போதாததற்கு, செயற் கமிட்டியில் அங்கம் வகிக்காதவரான சூரியா விக்கிரமசிங்காவையும், சங்கத்திலேயே அங்கத்தினரல்லாதவரும் இலங்கையில் வசிக்காதவருமான பிரபல கம்பெனி முதலாளி என். யூ. ஜெயவர்த்தனுவின் மருமகள் திருமதி ஜெயவர்த்தனுவையும் ''போட்டிப் பிரதிநிதிகளாக'' அல்ஜீரிய மகாநாட்டிற்கு அனுப்பினர்.

## சோவியத் ஸ்தானிகராலயம் உதவி

சோவியத் ஸ்தானிகராலயம் உதவிக்கு ஓடோடி வந்து பிரயாணச் செலவைத் தந்திருக்கிறது.

ஆனுல் சூரியா நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதிபெற, மகாநாட்டு அமைப்பாளர்களிடமிருந்து வந்த உத்தியோகபூர்வமான அழைப்பை வெளிநாட்டு அமைச்சு பார்வையிடவேண்டும். இந்த அழைப்பு சங்க மத்தியஸ்தானத்திற்கு வந்து அதன்பேரிற்தான் கமிட்டி தெரிவுசெய்த பிரதிநிதிகள் மூவரும் அல்ஜீரியா செல்ல அனுமதி பெற்றனர்-

செல்வி சூரியா விக்கிரமசிங்கா எப்படி அனுமதிபெற முடிந்து இதுபற்றி விக்கிரமசிங்கா—கெனமன்— அஸீஸ் கோஷ்டியிடம் சங்கத் தலைவியர் திருமதி தேஜா குணவர்த்தனு எழுப்பிய கேள்விக்குச் சரியான' தெளிவான பதிலில்லை.

திருமதி டொரீன் விக்கிரமசிங்காவும் டாக்டர் விக்கிரமசிங்காவும் ''சகலதும் முறையாக நடந்தது'' என அறிக்கை விடுப்பதோடு, வெளிநாட்டிலாகா அதிகாரிகளுக்காகவும் வக்காலத்துவாங்குகின்றனர். ஆனுல் அழைப்புக் கடிதம் பற்றிய கேள்விக்குக் குறிப்பாகப் பதில் என்ன?

ஜனநாயகம், பெரும்பான்மை முடிவு ஆகியன பற்றி வாய்கிழியப் பேசும் திரிபுவாதிகள் கமிட்டி முடிவுக்கு எதிராகச் செயற்பட்டமைக்குக் கூறும் காரணம் விசித்திரமானது.

தாங்கள் ''நடுநிலைமையாளர்'' ஒருவரைப் பிரேரித்ததாகவும் அவரைக் கமிட்டியிற் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொள்ளாததால் தான் தாங்கள் பெரும்பான்மையினர் தெரிவு செய்த பிரதிநிதிகளின் அருகதைக்குச் சவால் விடப் போட்டிப் பிரதிநிகளை அல்ஜீரியாவுக்கு அனுப்பியதாகவும் திரு. அஸீஸ் அறிக்கை விடுத்தார். அப்படியானுல், கமிட்டி சட்டவிரோதமானது என்ற குற்றச்சாட்டுக்கு என்ன ஆனது? பெரும்பான்மையினர் இச் சிறுபான்மைச் சிலரின் தில்லுமுல்லுகளுக்குப் பயந்து அவர்கள் விரும்பும் ''நடுநிலைமையாளரைத்'' தெரிவு செய்வதுதான் கமிட்டியைச் சட்டரீதியானதாக ஆக்கும் என்பது தான் இக் கோஷ்டியினரின் ''ஜனநாயகமோ?''

—குமாரலிங்கம்

# விலக்கப்பட்டார்

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ள இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் பருத்தித்துறைப் பிரதிநிதியாகச் சில மாதங்களுக்கு முன்பு ரி. குகதாசன் என்பவர் நியமிக்கப்பட்டு வேலை செய்து வந்தார். இவர் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க சட்ட திட்டங்களுக்கு முரணுன, தொழிலாளர்களுக்கு விரோதமான பலவித நடவடிக்கைகளில் ஈடுபட்டதினுல், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க பருத்தித்துறைப் பிரதிநிதிப் பதவியிலிருந்து நீக்கப் பட்டார். இப் பேர்வழிக்கும் எமது தொழிற் சங்கத்திற்கும் எதுவித தொடர்புமில்லை. இ. போ. ச. தொழிலாளர்களை எமது சங்கத்தின் பெயரினுல், இவருடன் எதுவித தொடர்பும் வைத்துக்கொள்ளல் வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இ. மோ. தொ. ச.
செயலாளர்

ஆசிரியர் கடிதம்

# நட்புறவுச் சங்கம் மூலம் நாள் கடத்தும் திரிபுவாதிகள்

கர்மவீரன் கார்ல் மார்க்ஸின் கற்பக விருட்சக் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, காலமெல்லாம் கஷ்டப்பட்டு, தொழிலாளி வர்க்கத்தின் கண்ணீராலும் செந்நீராலும் கட்டி வளர்த்த கம்யூனிஸ்ட் கட்சியைக் காட்டிக் கொடுத்த திரிபுவாதிகளுக்கு கல்தாக் கொடுத்தது ஈழத்து உழைப்பாளி வர்க்கம். எனினும் குருஷ்சோவின் குண்டாந் தடியைக் கண்டு குலைநடுக்கம் எடுக்கும் குருஷ்சோவ் கும்பல் தாங்களும் கட்சி நடத்துகிறோம் என்று காட்ட முற்பட்டிருக்கிருர்கள். இவர்கள் கட்சி நடத்தும் விதம் விசித்திரமும்விநோதமும் நிறைந்தது. தனித்தியங்க-தன்காலில் நிற்கத் தைரியமற்ற திரிபுவாதிகள் தந்திரங்கள் மூலம் கட்சி நடத்துகிருர்கள். கொழும்பில் ஐக்கிய முன்னணியினரின் உதவியுடன் உலாவி வரும் திரிபுவாதிகள், யாழ்-பிரதேசத்தில் நட்புறவுச் சங்கங்கள் மூலம் நாள் கடத்துகிருர்கள். இது ஒன்றே இவர்களின் அரசியல் அறிவீனத்தை அப்படியே அம்பலப் யடுத்துகிறது!

நட்புறவுச் சங்கங்கள் நாட்டில் இருப்பது இரு நாடுகளின் நட்பையும், உறவையும் வளர்ப்பதற்கே ஒழிய, வயிறு வளர்ப்பதற்கு அல்ல. இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தைப் பொறுத்த மட்டிலும் இதே நியதிதான். ஆனுல் யாழ்-பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம் திரிபுவாதிகளின் சில கூலிப் பட்டாளங்களின் பொருளாதாரப் பிரச்சினை .போக்கும் நிறுவனமாகவும் திகழ்கிறது.

மார்க்ஸிஸ—லெனினிஸத்திற்கு மாபெரும் துரோகமிழைத்த திரிபுவாதிகள் யாழ்-பிரதேசத்தில் தூக்கி எறியப்பட்டதும்-வர்க்க விரோதிகள் விரட்டியடிக்கப்பட்டதும் அவகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அரசியலில் ஈடுபட ஆசிரியர் பதவியில் இருந்து இளைப்பாற விண்ணப்பித்த திரிபு ஒன்று அவ் விண்ணப்பத்தை வாபஸ் பெற்று அரசியலில் இருந்து இளைப்பாறியது. சிறுபான்மைத் தமிழர் மகாசபை மூலம் காலம் கடத்தலாம் என்றுஎண்ணினுர்கள். அவ்வெண்ணமும் மண்ணுனது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்டு அல்லலுறும் அம்மக்கள் திரிபுவாதிகளின் ஆசை வார்த்தைக்கு ஆளாக மறுத்து விட்டார்கள். அதன் பின் திரிபுவாதிகளின் சிந்தனை தடம் புரண்டு ஓடித் தடக்கி விழுந்து நின்ற பொழுதுதான் நட்புறவுச் சங்கம் அவர்களின் நினைவிற்கு வந்தது!

கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எந்தவிதமான தில்லு முல்லுகளை எல்லாம் கையாண்டார்களோ அதே முறையை இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்கத்திலும் கையாண்டார்கள் திரிபுவாதிகள். பொதுக் கூட்டத்தில் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர், காரியரிசி கமிட்டிக்குத் தெரியாமல் அவர்களின் பதவிக்காலம் ஓர் ஆண்டு முடிமுயுமுன், குசுகுசு கூட்டம் நடாத்திப் புதிய நிர்வாக சபையைத் தெரிந்தது குருஷ்சோவ் கும்பல். இவர்களின் இந்த அடாத்தான செயலுக்கு ஆதரவு கொடுத்தது சோவியத் ஸ்தானிகராலயம். கட்சி மாநாட்டில் முடிவு செய்தபடி இரு வருடத்திற்குள் மாநாட்டைக் கூட்டாமல் மூன்று வருடத்திற்கு மேலும் தமது பதவிக் காலம் முடிந்த பின்பும், தம் பதவிகளில் அடாத்தான முறையில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருக்க முயன்ற திரிபுவாதிகள் இலங்கை-சோவியத்நட்புறவுச் சங்க உத்தியோகத்தர்களை மட்டும் அவர்களின் ஆயுட்காலம் முடியுமுன் அப்புறப் படுத்தினுர்கள். திரிபுவாதிகளின் அடாத்தான செயல்களுக்கு ஆதரவு கொடுத்ததன் மூலம் சோவியத் ஸ்தானிகராலயம் தனது மதிப்பைக் குறைத்துக் கொண்டது. சோவியத் ஸ்தானிகராலயத்தின் உதவி இல்லாவிட்டால் திரிபுவாதிகளின் தில்லு முல்லுப் பலித்திருக்காது என்பது திண்ணம்.

திரிபுவாதிகளே! பிணம் தூக்கும் குணம் கொண்ட குருஷ்சோவ் கும்பலை இனங்கண்டு விட்டது இந்நாட்டு உழைப்பாளி வர்க்கம்! இனிமேல் நீங்கள் என்னதான் வேஷம் போட்டாலும், உங்களது அழிவைத் தடுத்து நிறுத்த அவனியில் எந்தச் சக்தியாலும் முடியாது! முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் ஏற்படவிருக்கும் கதிதான் திரிபுவாதத்திற்கும் என்பதைக் கருத்திற் கொண்டு கருமமாற்றுங்கள்!

—எஸ். ஜயக்கொடி

## தூக்க மாத்திரை அறிக்கை

இரு வாரங்களுக்குமுன் திரிபுவாத சீர்குலைவாளர்களின் கொழும்புக் குழுக் கூட்டம் 35 பேருடன் கூடியது. இக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்துத் தத்துவப்புலியும், கொழும்பு சுகஜீவனவாதி பீட்டரும் போலி 7-வது மாநாட்டு அரசியல் அறிக்கையை விமர்சனம் செய்தனர்.

முடிவில் ஒருவர் இந்த அறிக்கை அரசியலறிக்கையா அல்லது சண்முகதாசனைத் திட்டும் அறிக்கையா என்று வினவினுர். அதோடு இந்த அறிக்கையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதத்தின் பெரும் பகுதி அடங்கியுள்ளதே அது ஏன் என்று கேட்டுள்ளார்.

இது சண்முகதாசனின் ஆட்களின் கேள்வி என்று கூறி பண்டிதாவும் வேறு சிலரும் அவரைப் பயமுறுத்திப் பேசவிடாது தடுத்து விட்டார்கள்.

இந்த வேளையில் ஆப்தீன் எழுந்து இந்த அறிக்கையில் ஒன்றுமில்லை; படிக்கும்பொழுது தூக்கம் வருகின்றது என்றபொழுது அருகிலிருந்தவர் அவரைத் தூங்கும்படி கேட்டார்.

உடனே ஆப்தீன் பெஞ்சில் குறட்டைவிட்டார். இதைக் கண்ட பண்டிதாவும், மற்றவர்களும் கூட்டம் முடிந்ததுஎன்று அறிவித்தார்கள்.

—நமது இரகசிய நிருபர் செய்தி

# மந்திரிப் பதவிக்கு வாய்பிழந்து நிற்கும் சந்தர்ப்பவாதத் தலைவர்கள்

## புரட்சிகர இடதுசாரி ஐக்கிய முன்னணி காண்போம்

கடந்த சில மாதங்களாக அடிப்படை அரசியல் பிரச்சினைகள் பலசம்பந்தமாகஅதாவது அரசாங்க அதிகாரங்கள், முதலாளித்துவ சர்வாதிகாரம். பாராளுமன்றம், சோஷலிஸத்திற்கான வழி, திரிபுவாதம், இடதுசாரி ஐக்கிய முன்னணி, கொள்கையின் அடிப்படை ஐக்கியம், புரட்சிகர கண்ணோட்டம், வர்க்கக் கண்ணோட்டம் போன்ற பல விஷயங்களை எடுத்து நமது அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளோம்.

மேற்கூறிய விஷயங்களில் எதுசரி எது பிழை என்று உரைகல்லில் தீட்டிப் பார்ப்பதைப்போன்ற பல விஷயங்கள் கடந்த சில வாரங்களாக நாட்டில் நடைபெற்று வந்துள்ளன. மேலும் நடைபெறுவதற்குரிய சூழ்நிலைகள் உள்ளன. அத்துடன் இலங்கையின் அரசியல் வானில் தென்படும் கருமேகக் கூட்டத்தினுள்—அரசியல் போராட்ட கயிறிழுப்பு மூலம் ஏற்படும் அரசியல் பாடங்கள் பலவற்றை நாம் கற்றறிந்து கொள்ள முடியும்.

### அரசாங்க அதிகாரம் பற்றிய பிரச்சினை

அதிகாரம் செலுத்தும் வர்க்கம் ஒரு காலத்திலும் தன்னிச்சையாக அரசாங்க அதிகாரத்தைக் கைவிடவே மாட்டாது. எந்தவிதப் புரட்சியிலும் அடிப்படைப் பிரச்சினையாக எழுவது அரசாங்க அதிகாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினையேயாகும். அரசாங்க அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு சமாதான பூர்வமாகவே தொழிலாள வர்க்கம் விரும்பினாலும்கூட. அது சமாதான பூர்வமாகவா அல்லது பலாத்காரமாகவா என்பதை தீர்மானிப்பது வர்க்க விரோதியேயாகும். தனது கையிலுள்ள அதிகாரபலம் கை நழுவிப்போகிற பொழுது எவ்வித கிலேசமுமில்லாமல் அது பலாத்காரத்தைக் கைக்கொள்ளுகிறது.

முதலாளித்துவ சர்வாதிகாரம் எப்பொழுதுமே தன்னை ஜனநாயகம் என்ற பெயரில் மாத்திரம் அழைத்துக்கொள்ளுவதுண்டு. அதாவது ஆட்சி பீடத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தினுல் ஏனைய வர்க்கங்களை நசுக்குவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு அடக்குமுறை இயந்திரமாகும் அது. தனக்கு வேண்டிய நேரம் வரும்பொழுது தன்னுடைய ஜனநாயக முகமூடியை களைந்தெறிந்துவிட்டு, கொடூரமான சர்வாதிகார வழிகளின் உதவியை நாடுகிறது, தனது சர்வாதிகாரத் தன்மையை மூடி மறைத்துக்கொள்ளும் ஒரு 'ஆபரணமாகவே' பாராளுமன்றத்தை அது உபயோகப்படுத்திக் கொள்ளுகிறது.


ஆட்சியின் செயல் நடவடிக்கைகள் நடைபெறுவது பாராளுமன்றத்தின் மூலமல்ல. அதன் பின்னுல் திரைமறைவிலிருக்கும் இலாகா அதிகாரிகள், இராணுவ வீரர்கள் போன்ற பலதுறைகளில் உயர்தரத்தில் வீற்றிருக்கும் நபர்களாலேயாகும்,

தங்களுக்கு சாதகமாயில்லை என்று தெரிந்தவுடன் முதலாளி வர்க்கத்தின் பாராளுமன்றத்தையே அவர்கள் கலைத்துவிடுகிருர்கள். முதலாளித்துவ சமூகத்தில் அழுகி நாற்றமெடுக்கும் சமூக ஊழல்களை வெளிப்படுத்தும் ஒரு மேடையாக அதை உபயோகப் படுத்திக்கொள்ளலாமே தவிர, பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை நிலை நாட்டுவதற்கு அல்லது கைப்பற்றுவதற்கு அது உகந்ததாகாது. சோஷலிஸத்தை நோக்கிச் செல்லுவதற்கு சமாதான பூர்வமாகவோ அல்லது சமாதானபூர்வமற்ற ரீதியிலோ இருவகையிலும் செயல்படுவதற்கு பாட்டாளி வர்க்கம் தயாராயிருத்தல் வேண்டும். பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தினுல் ஏற்படுத்தப்பட்ட ஆட்சியமைப்பு இயந்திரத்தை சுக்குநூருக்கி தகர்த்தெறிந்துவிட்டு, தனக்கே உரித்தான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமைத்தல் வேண்டும் என கடந்த காலங்களில் நாம் கூறி வந்ததுதான் உண்மையாகும். அதுதான் மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்றவர்களும் முன் வைத்த உண்மையாகும். இந்த மார்க்ஸிஸ வழியே நேர்மையானதும் சரியானதுமாகும். அத்துடன் அது இன்றைய காலத்துக்கு ஏற்றதுமாகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினுல் கடந்த சில நாட்களாக பிரகடனப் படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டங்களையும் அதன் பின் பாராளுமன்றத்தை சில மாதங்களுக்கு கலைத்த நடவடிக்கைகளையும் பார்க்கும்போது இவைகள் நன்ருக நிரூபிக்கப்படுகின்றன.

### இடதுசாரி ஐக்கிய முன்னணி

இன்றைய இடதுசாரி ஐக்கிய முன்னணி மந்திரி பதவிகளை நோக்காகக் கொண்ட ஒரு முன்னணியேயாகும். ஆனுல், அது போதுமானதல்ல. உண்மையான இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒன்று உருவாகுதல் வேண்டும்.

இலங்கையின் புரட்சியை வெற்றிகரமாக்கி, பாட்டாளி வர்க்கத்தின் கையில் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உண்மையான புரட்சிகரக் கூட்டாக இடதுசாரி ஐக்கிய முன்னணி பரிணுமமாகவேண்டும். இதை செய்ய ஒரு குளறுபடியான கூட்டமைப்பினுல் முடியாது. அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியுமான



பிரேமலால் குமாரசிரி

பொதுக்காரியதரிசி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

ஒரு கூட்டு முன்னணியாதல் வேண்டும். கொள்கை ரீதியாக அமையாத கூட்டுமுன்னணிகள்நிரந்தரமானவையல்ல. அது சந்தர்ப்ப வாதமாகும். நிரந்தரமான உறுதிவாய்ந்த ஐக்கிய முன்ணணி, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அடிப்படைக் கொள்கையிலிருந்தே அமையவேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு துரோகம் விளைவிப்பவர்கள் நாங்கள் அல்ல; சந்தர்ப்பவாதத்தில் திளைத்து ஊறிப்போன சிலர் அதனுள் இருந்தே அந்தத் துரோகத்தைச் செய்கின்றனர். நாங்கள் கூறியபடி நேர்மையான கொள்கை அடிப்படையான ஐக்கிய முன்னணியை அமைக்காமல் இப்படிப்பட்ட சந்தர்ப்ப முன்னணிகள் அமைப்பதன் மூலம் ஏற்படுவதென்ன? ஐக்கிய முன்னணியின்மேல் அபார நம்பிக்கை வைத்துள்ள மக்களை ஏமாற்றமடையச் செய்வதுடன் அவர்களை நட்டாற்றில் விட்டதுமாகும் என்று நாங்கள் முன் கூறியது எவ்வளவு சரியென்பதை கடந்த ஒன்றிரண்டு வாரங்களில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைவர்களின் அவசரகால நடவடிக்கைகள், வேலைநிறுத்தங்கள், 21 கோரிக்கைகள் சம்பந்தமாக அவர்கள் நடந்துகொண்ட விதங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் மந்திரி பதவிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைப் பார்க்கும் போதுஐக்கிய முன்னணியில் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராய பேதங்கள் நன்ருக வெளியில் தெரியவந்திருக்கின்றன.

### அரசாங்கத்தின் கையாலாகாத் தனம்

அடிப்படையான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்காமல் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்தால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடியவைகள் சம்பந்தமாக நாங்கள் கூறியவைகள் உண்மையெனவும் நிரூபிக்கப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்க்காமல் பங்கலோட்டுத் தனத்திற்கு ஆளாகியுள்ள அரசாங்கம் இன்றைய கொள்கையை மாற்றி செயல்படுவதற்குப் பதிலாக தனது பழைய வட்டத்திற்குள்ளிருந்தே அதற்குத் தூணுக நின்று செயல்படுவதற்கும் மறுபுறத்தில் இடதுசாரித் தலைவர்களினது ஒத்துழைப்புடனும், இன்னுமொரு புறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் சேர்ந்து தேசிய அரசாங்கம் என்ற கோஷத்தைமுன் வைத்துள்ளது

இன்றைய அரசாங்கத்தின் தொழிலாளி வர்க்க கொள்கைக்கு எதிரான செயல்களைப் பற்றி நாம் முன்னுல்கூறியது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதைப் போன்றே தொழிலாளி வர்க்கத்தினிடையேயிருந்து கொண்டு பேயாட்டம் ஆடும் சீர்திருத்தக் கொள்கைகளும், திரிபுவாத நாசகாரச் செயல்களும் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன.

தொழிலாளி வர்க்கத்தின் பொதுக் கோரிக்கையான 21 கோரிக்கைகளின் பின்னுல் போராட்டம் வலுவடைந்து வரும் காலகட்டமாகும் இது. இந்நேரத்தில்தான் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் போட்டுள்ளது. இத்துடன் நின்றுவிடாமல் அரசாங்கம் எதிர்வரும் போராட்டங்களுக்கு முகம் கொடுக்கும் வண்ணம், இடதுசாரித் தலைவர்களினதும், யூ. என். பி. கட்சியினதும் உதவியையும் நாடியுள்ளது. யூ என். பி. கட்சியின் ஆதரவை நாடியுள்ளதைப் பற்றி நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனுல் இடதுசாரித் தலைவர்களினது ஆதரவை நாடியுள்ளது சம்பந்தமாகப் பார்க்கும்போது ஒன்று வெளிப்படையாகத் தெரியவருகிறது. தொழிலாளி வர்க்க எதிர்ப்புக் கொள்கைகளின்போது தங்களுக்கும் சீர்திருத்த திரிபுவாத தலைவர்களுக்குமிடையில் அடிப்படையான ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அரசாங்கம் அப்படி ஏற்றுக்கொள்ளுவதற்கு பல நல்ல காரணங்கள் உண்டு. கடந்த காலங்களில் இ. போ. ச. ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தின்போது. காட்டிக்கொடுத்தல் தொழிலை மேற்கொண்ட இந்த திரிபுவாதிகளின். செயல் தொழிலாளி வர்க்கத்திற்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியதுதான் முக்கியகாரணங்களிலொன்று.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக தொழிலாளி வர்க்கத்திற்கிடையில் பெரும் பீதியையும், அவிசுவாசம் ஏற்படுத்தியுள்ளது. புரட்சிகர கண்ணோட்டத்திற்கு அப்பால் இருந்துகொண்டு தான்தோன்றித் தனமான திரிபுவாதத் தலைமையின் பின் இருளினூடே சென்று கைவிடப்பட்ட நிலைமை ஏற்படுமோ என்று தொழிலாளி வர்க்கம் இன்று பீதியுறும் தரத்திற்கு வந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் பலருடைய முகமூடிகள் கிழித்தெறியப்படும். இப்பொழுது நடைபெற்றுவரும் செயல்களின் முன்னுல் தொழிலாளிவர்க்கம் சரியான கவனத்துடன் இருக்காவிடில் தொழிலாளி வர்க்கம் மிகப் பெரும் இன்னல்களுக்கு ஆளாகவேண்டி நேரிடும். மறுபக்கத்தில் சரியான கண்ணோட்டத்துடன் புரட்சிகரக் கொள்கையோடு செயல்படுமானுல், தொழிலாளிவர்க்கம் இன்றைய கட்டத்தில் பரந்த அளவில் யோசித்து செயல்படுமானுல் அறுவடையை நாம் நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளமுடியும்.

கட்டுரை: பிரேமலால் குமாரசிரி

—தமிழில்:- மரியதாசன்

# புரட்சியின் மூலமே புத்துலகம் படைக்க முடியும்

## பாராளுமன்ற பாதை பணக்காரர் பாதை

தத்துவப்போராட்டம் மீண்டும் ஆரம்பமாகி உக்கிரமடைந்து இருக்கிறது. இரண்டு விதக் கருத்துக் கொண்டவர்களும் வெளிப்படையாகவே விவாதத்தை நடத்துகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் முதலாளித்துவபாராளுமன்ற ஜனநாயக முறையே சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும், மற்றப் பகுதியினர் புரட்சிதான் சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரும் என்றும் விவாதிக்கின்றனர்.

எப்பொழுது சமுதாயப் புரட்சிக்கு சமாதான வாய்ப்பு வசதிகள் உண்டாக்குகின்றனவோ அப்பொழுதெல்லாம் இப்படியான தத்துவார்த்த முரண்பாடுகள் ஏற்படுவதை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இருபதாம் நூற்ருண்டின் முற் பகுதியில் ஏகாதிபத்தியம் அழிக்கப்படும் தறுவாயில் இருக்கும் போதும் அது உலக மகா யுத்தத்துக்கு ஆயத்தம் செய்யும் போதும் புரட்சிகர இயக்கங்கள் எல்லாவிதச் சுரண்டல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வர்க்கப் போராட்டத்தை வலுப்பெறச்செய்துபுரட்சிக்கு ஆயத்தம் செய்தனர். இத் தருணத்தில் இரண்டாவது சோஷலிஸ்ட் சர்வதேசிய வாதிகள் சீர்திருத்த வாதிகளாக மாறி பாராளுமன்ற முறையே தேவையான சமுதாய மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியது, என்று வக்காலத்து வாங்கினர். இவர்கள் பெரும்பாலும் புரட்சியை கவிழ்ப்பதில் வெற்றியடைந்ததோடு ஏகாதிபத்தியமும் முன்எப்பொழுதும் ஏற்பட்டிராத அழிவை ஏற்படுத்திய முதலாவது உலக மகா யுத்தத்தைக் கைவிட்டது. பின் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஏகாதிபத்தியத்தின் தலைச்சன் பிள்ளையான ''பாஸிஸம்'' அழிக்கப்படும் தருணத்திலும் மகத்தான சீனமக்கள் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் காவல் நாயான சியாங் கே-ஷேக்கும் எதிராக புரட்சி நடத்தும் பொழுதும் ''பிரௌடர்'', ஆதரவாளர்கள் ஏகாதிபத்தியம் நல்லபிள்ளையாக மாறிவிட்டது, ஆகவே புரட்சிகரப் போராட்டங்கள் காலம் கடந்து லிட்டன என்று விவாதிக்க முன்வந்தனர்.

ஏன்? எங்கள் நாட்டிலும் கூட 1947-ம் ஆண்டு ஏகாதிபத்தியத்துக்கும் அவர்களின் உள்நாட்டு வால்பிடிகளுக்கும் எதிராக எமது நாட்டு மக்கள் ஒரு பிரமாண்டமான வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். இந்த நேரத்தில் ''பிரௌடர்'' வாதிகள் எங்கள் நாட்டிலும் கூட யூ. என். பி. க்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கி ஏகாதிபத்திய பாதந்தாங்கி டி. எஸ். சேனநாயக்காவுக்கும் அவருடை கும்பல்களுக்கும் வோட்டுச் சேகரிக்க மக்கள் முன் வந்தனர் ஆனாலும் ''பிரௌடர்'' வாதம் இன்னும் ஒழிக்கப்படவில்லை.

உலகின் மூன்றில் ஒரு பகுதியும், ஜனத் தொகையில் ஐந்தில் இரண்டு பகுதியும் சோஷலிஸ மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கா நாட்டு மக்கள் ஏகாதிபத்திய நுகத் தடியில் இருந்து தம்மை விடுவிக்க போராடுகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நுனி வாயிலில் இருக்கும் சின்னஞ் சிறிய கியுபா தன்னை விடுவித்து சோஷலிஸத்தை நோக்கி வீறுநடை போடுகின்றது. தென்-கொரியா, தென்-வியட்நாம், லாவோஸ், வெனிசுவலா, ஆகிய நாட்டு மக்கள் ஏகாதிபத்தியத்திலிருந்து தம்மைவிடுவிக்க பலவாருன தியாகங்கள் செய்து ஆயுதம் தாங்கி போராடுகிருர்கள். உலக மக்கள் ஏகாதிபத்தியத்திற்கும், அதன் அணுகுண்டு மிரட்டலுக்கும் அஞ்சி ஒடுங்குவதற்கு மாருக ஏகாதிபத்தியம் ஒரு கடதாசிப் புலி என எள்ளி நகையாடுகின்றனர். இப் புரட்சிக் காலகட்டத்தில் தான் போராட்டத்தையும் புரட்சி புரட்சியையும் கண்டு அஞ்சும் திரிபுவாதிகள் பாராளுமன்றந்தான் சமுதாய மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்று சொல்ல முன்வருகிருர்கள்.

### அரசாங்கம் பலாத்காரக் கருவிக் கடை

அரசாங்கம் என்பது ஒரு பலாத்காரக் கருவிக் கடை, பொலிஸ், மந்திரிசபை, பாராளுமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், நிருவாக ஸ்தாபனங்கள், சமயத்தையும் உள்ளடக்கியதுதான் அரசாங்கம். அரசாங்கத்தின் உள்ளடக்கமான இவை யாவும் தனித் தனியாகவும் பலவாருகவும் பலாத்காரத் தன்மை வாய்ந்தவை. அந்தஸ்து தானம் வழங்குவதும் அதிகார வர்க்கத்திற்கும் அதன் சொத்துக்கும் தனது படை பலத்தைக் கொண்டு பாதுகாப்புக் கொடுப்பதுமே அரசாங்கத்தின் நோக்கம். பாராளுமன்றம் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களில் ஒன்று. அதிகார வர்க்கம் இந்த ஸ்தாபனங்களில் தமது அதிகாரத்தின் மூலம் ஆட்டிப்படைக்க வல்லமையுடையது. சட்டங்களும் அரசியல் சட்ட திட்டங்களும் ஆளும் வர்க்கத்தினருக்கு சாதகமாகவே உருவாக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றமும் இதற்கு விதி விலக்கல்ல, பாராளுமன்றம் சர்வ ஜன வாக்குரிமை என்னும் ஒரு பிரமையை ஏற்படுத்தத்தான் செய்கிறது. எல்லோருக்கும் குறிப்பாக சுரண்டப்படும் தொழிலாளி வர்க்கத்துக்கும் வாக்குரிமை இருப்பதால், பெரும்பான்மையினரான தொழிலாளி வர்க்கத்தினர் தமது வாக்குப் பலத்தால் ஆயுதப் போராட்டத்தை விடுத்து ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று கருதப் படுகிறது. இது கழுதைக்கு முன் வீசப்படும் தீனிக்கு ஒப்பானதாகும். இதைத்தான் சிலர் தூக்கிப் பிடிக்கமுன் வருகின்றனர். முதலாளித்துவ நாட்டில் அரசியல் சட்டதிட்டங்கள் முதலாளி வர்க்கத்தினரால் அவர்களுக்குச் சாதகமான முறையிம் உண்டாக்கப் பட்டிருக்கிறது. சோஷலிஸ வாதிகள் பாராளு மன்றத்தில் ஆதிக்கம் செலுத்தி தொழிலாளி வர்க்கத்தை உறுஞ்சும் முதலாளி வர்க்கத்தை உடைத்தெறியக் கூடியவாறு சட்ட திட்டங்கள் அமைக்கப்படவில்லை. ஆகவே தான் கர எண்ணம் படைத்தவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தும் பாராளுமன்ற வாயிலைத் தானும் எட்டிப்பார்க்க முடியாதிருக்கின்றனர். பாஸிஸ எதிர்ப்பு மூலம் பலம் வாய்ந்தவர்களாகக் கட்டிவளர்க்கப்பட்ட இத்தாலிய, பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக்கள் கூட இதுவரை பாராமன்ற மூலம் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது இருக்கிருர்கள். ஸ்பெயின், கேரளம் ஆகிய நாடுகளில் மட்டும்தான் சிறிதளவு வெற்றி கிடைத்தது. ஆனாலும் இப் புரட்சிகர அரசாங்கங்களுக்கு ஏற்பட்ட கதியை சரித்திரம் எமக்கு எப்படிக் காட்டுகிறது? ஸ்பெயின் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு பிரான் கோவின் பாஸிஸ ஆட்சியும், கேரளத்தில் நேருவின் ''ஜனநாயக சர்வாதிகார'' ஆட்சியும் உலைவைத்தன. சில சந்தர்ப்ப சூழ் நிலைகளில் புரட்சிகர இயக்கங்களின் கைகள் பாராளுமன்றத்தில் ஓங்கும் சமயம் ஆளும் வர்க்கத்தினர் தமது பலாத்கார ஸ்தாபனங்களின் மூலம் புரட்சிகர ஆட்சியை நசுக்கி விடுகின்றனர். ''ஆளும் வர்க்த்தினர்-பாராளுமன்றமூலம்—ஆட்டமாடுவார்கள். ஆனல் தோற்கும் போது தமது சட்டங்களை மாற்றி விடுவர்'' என்று லஸ்கி சரியாகக் கூறினுர். ஸ்பெயினும், கேரளமும் பாராளுமன்றத்துக்கு ஒரு பாடமாக இருந்தாலும் அவர்கள் அதிலிருந்து படிக்க விரும்பவில்லை.

### மந்திரிசபை சர்வாதிகாரம்

நாம் இப் பிரச்சினையை வேருேர் கோணத்திலிருந்து பார்ப்போம். பாராளுமன்றம் பெயரளவிலேயே ஆதிபத்தியம் உடையது. மக்களின் ஆதிபத்திய உரிமைகளைப் பாதிக்காத வகையில் அவர்களின் ஆதிபத்திய உரிமைகளை மக்கள் பிரதிநிதிகளுக்கு மாற்றுவதே பாராளுமன்றம் என்று டைசி கூறுகிருர். ஆனல் பாராளுமன்றம் ஆதிபத்திய உரிமை உடையதா? பெருவாரியான ஆதரவாளர்களைக் கொண்ட குழு அல்லது கட்சியின் தலைவர்களே பாராளுமன்றத்தில் அரசாங்கம் அமைக்கக் கூடியவர்கள். அவர்கள் அரசாங்கம் அமைத்த நாளில் இருந்து மந்திரிசபைதான் சர்வாதிகாரம் செய்கின்றது. பாராளுமன்றத்திலுள்ள அரசாங்க ஆதரவாளர்கள் ஆட்சியினரின் கைக் கருவிகளாக இருக்கின்றனர். அவர்கள் சூயஸ் கால்வாயைப் பற்றியோ, பிரேவூமோ விவகாரங்களிலோ ஆட்சியினரை எதிர்த்துப் பேசினுலும் வாக்களிக்கும் சமயத்தில் காமன் சபையில் ஆட்சியினருக்குச் சாதகமாகவே வாக்களிப்பர். இப்படி இவர்கள் செய்வதற்குக் காரணம் என்னவென்ருல் தாங்கள் தங்கள் தலைமைப்பதவிகளையோ அல்லது அடுத்து வரும் பொதுத் தேர்தல்களில் தங்கள் ஆசனங்களையோ இழக்கக்கூடும் என்ற பயமே ஆகும். இப்படி இவர்கள் செய்வது மந்திரிசபை சர்வாதிகாரத்

## தத்துவ விளக்கம்

துக்கு இடமளிக்கிறது. பாராளுமன்றம் சட்டம் அமைப்பதில்லை மந்திரிசபைதான் சட்டம் அமைக்கிறது. பாராளுமன்றத்தின் வேலைகள் என்று சொல்லப்படும் நிதியை கண்காணித்தல், நிர்வாகத்தை மேற்பார்வை இடுதல், அரசாங்கக் கொள்கையை அங்கீகரித்தல், அரசாங்கத் திட்டத்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்தல், நீதிமன்றங்களைக் கண்காணித்தல், தவருன தீர்ப்புகளைத் தள்ளுபடி செய்தல் ஆகிய வேலைகளை உண்மையில் மந்திரிசபையே செய்கிறது. பாராளுமன்றம் பெயரளவிலேயே ஆதிபத்தியம் உடையது. ஆகவே அதிகாரத்தில் இருக்கும் வர்க்கத்தை அழித்து, ஒரு புதிய சமூகத்தை சக்தியற்ற பாராளுமன்ற மூலம் உருவாக்க முடியும் என்று கனவுகாண்பது நகைப்புக்கிடமானதாக இல்லையா? ''மூக்கியமான எதுவும் நடக்காதபடி பார்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி இருக்கும் அலுவலகமே பாராளுமன்றம்'' என்று சால்ஸ்டிக்கன்ஸ் சொல்லியதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.

இங்கிலாந்துதான் முதல் முதலில் தொழிலாளி வர்க்கத்துக்கு வாக்குரிமை கொடுத்தது. கொன்சர்வேட்டிவ் கட்சியின் பிரதம மந்திரியான டிஸ்றேலி 1867-ம் ஆண்டு தொழிலாளி வர்க்கத்துக்கு வாக்குரிமை கொடுக்கும் மசோதாவை ஆரம்பித்துப் பேசுகையில் ''நாங்கள் பலம்பொருந்திய தொழிலாளி வர்க்கத்தினரை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்து, அவர்கள்தான் எங்கள் எஜமானர்கள் என்ற எண்ணத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்தி அவர்களை ஆட்சிசெய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பாராளுமன்றத்துக்கு கொண்டு வராது பாராளுமன்றம் அல்லாத முறைகளை அவர்கள் கையாண்டுஎம்மை அழிக்கவிட வேண்டும். நாங்கள் முதலாவதாக உள்ளதையே விரும்புகின்றேன்'' என்று கூறிருர். டிஸ்றேலிக்கு சர்வஜன வாக்குரிமையுடன்கூடிய பாராளுமன்றமே மாற்றத்தை தடுக்க சரியான ஆயுதம். சோஷலிஸ முகாமில் இருந்த திரிபுவாதிகள்டிஸ்றேலியின்இந்தக்கொள்கைக்கு ஆதரவளித்தனர்.

### புரட்சி மூலமே சமுதாய மாற்றம்

சமுதாய மாற்றத்தை எங்கும் புரட்சியின் மூலம்தான் ஏற்படுத்தியிருக்கிருர்கள். எங்கும் எப்பொழுதும் பாராளுமன்ற முறை வெற்றியளிக்கவில்லை. சமுதாய மாற்றம் அடிப்படையான குணம்ச மாற்றத்தை ஏற்படுத்துவது, முதலாளித்துவ சமுதாயத்தின் மூலவேரை அறுத்து அந்த இடத்தில் புதிய சோஷலிஸ மாற்றத்தைக் கட்டி எழுப்பவேண்டும். பாராளுமன்ற மூலம் பழுதுபார்க்கவும், சீர்திருத்தம் செய்யவும் எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவரவுமே முடியும். இந்த எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவருவதானது பழைய அம்சங்களை அப்படியே நிலைக்க விட்டுவிடும். பாராளுமன்ற ஜனநாயகம் ஆளும் வர்க்கத்தினரால் கொடுக்கப்பட்ட கொடையல்ல. உழைக்கும் மக்களின் போராட்டமே ஆளும் வர்க்கத்தினரை ஜனநாயக உரிமைகளை வழங்கும்படி நிர்ப்பந்தித்தது. ஆளும் வர்க்கத்தினர் தங்கள் தொண்டையை வெட்ட ஒரு கத்தியைக் கொடுப்பார்கள் என்று நாம் நிச்சயம் எதிர்பார்க்க முடியாது. கிடைத்த உரிமைகளின் மூலம் தற்போது உள்ள அமைப்பைத் தகர்க்க முடியாது. பலதடவைகளில் தொழிலாளி வர்க்கம் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியதை சுட்டிக் காட்டுகிருர்கள். ஆனல் இது எந்தச் சூழ்நிலையில் நடைபெற்றது என்பதை ஆராய வேண்டும். பெரும் போராட்டங்கள் நடந்த வேளையிலோ அல்லது அதன் பின்னரோ நடந்த பொதுத் தேர்தலில் புரட்சிகர இயக்கங்கள் தமது யிரதிநிதித்துவத்தை கூடுதலாக்கின.

இலங்கையில் 1947ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் மாபெரும் வேலைநிறுத்தத்தின் பின் நடந்ததால் கம்யூனிஸ்ட்கட்சி ஐந்து ஆசனங்களையும், எல். எஸ். எஸ். பி. பத்து ஆசனங்களையும், பி. எல். பி. ஐந்து ஆசனங்களையும் பெற்றன. மறுபக்கத்தில் 1952-ம் வருடம் நடந்த பொதுத் தேர்தலில் இடதுசாரிகள் தங்கள் தோழர்களை போராட்டத்தில் ஈடுபட்டதற்காக ஒருவரை ஒருவர் கண்டித்த காலகட்டத்திற்குப் பின் நடைபெற்றதால் முறியடிக்கப்பட்டனர். பாஸிஸ எதிர்ப்புப் போராட்டத்தால் பிரெஞ்சு, இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சிகள் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றன. இப்பொழுது சோஷலிஸத் தலைவர்கள் புரட்சியையும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பற்றி பேசும் தமது தோழர்களை மீண்டும் இகழத் தொடங்கி

—5-ம் பக்கம் பார்க்க

# விக்கிரமசிங்கா - கெனமன் கும்பல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்

### மத்திய கமிட்டியின் ஏகோபித்த தீர்மானம்

இவ்வருடம் ஜனவரிமாதம் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 7–வது தேசிய மாநாட்டில் தீர்மானித்தபடி, கடந்த மத்தியக் கமிட்டியின் 22 அங்கத்தவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு இரு மாதங்களாகியும் இதுவரை பதிலெதுவும் கிடைக்காததால் அக் குற்றங்களை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என மத்தியக் கமிட்டி கருதியதால், கடந்த 25-3-64 புதன்கிழமை நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டிக் கூட்டத்தில் இவர்கள் யாவரையும் கட்சியிலிருந்து விலக்குதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்களுள் டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, திரு. பீட்டர் கெனமன், திருவாளர்கள் எம். ஜி. மெண்டிஸ், எம். கே. அர்னேலிஸ் அப்புஹாமி, எஸ்.ஏ. வணிகசேகர, சரத் முத்தெட்டுவகம, கே. பி. சில்வா, வி. ஏ. சமரவிக்கிரம, எல். டபிள்யூ. பண்டித, சி. குமாரசாமி, ஜே, ஏ. கே. பெரேரா ஆகியோர் முக்கியமானவர்கள்.

ஜனவரியில் 12 குற்றச்சாட்டுக்களைக் கொண்ட குற்றப் பத்திரம் இவர்களுக்கு அனுப்பப்பட்டதும், இது எமது பத்திரிகையில் வெளியானதும் குறிப்பிடத்தக்கது.

---

# இலங்கைப் பத்திரிகைகளின் வளர்ச்சியை அமுக்கும் இந்தியப் பத்திரிகைகள்

(பத்திரிகைக்கமிஷன்முன் தமிழ்ப் பத்திரிகைகள் சம்பந்தமாக வீ. ஏ. கந்தசாமி, க. குமாரலிங்கம் ஆகியோரின் சாட்சியம்.)

## நமது தேச பத்திரிகைகள் வாழமுடியவில்லை

தென் இந்திய ஏகபோகத்தின் காரணமாக இலங்கையில் இலக்கிய சஞ்சிகைகளினதும் பிற சஞ்சிகைகளினதும் அபிவிருத்தி அசாத்தியமாக்கப்பட்டுள்ளது. இந்தியப் பத்திரிகைகள் பெருந் தொகையில், மிக மலிவாக அச்சிடப்படுவதால் அவற்றுடன் போட்டியிடுவது அசாத்தியம். மூன்றரைக் கோடி மக்கள் மத்தியில் வினியோகிக்கப்படுவை இலட்சக் கணக்கில் அச்சாகின்றன. ஒரு பெருங்கைத் தொழிலின் சாதகங்கள் அனைத்தும் அவற்றிற்குண்டு. இந்திய பெரும் வர்த்தக ஸ்தாபனங்களிடமிருந்து அவை பெறும் விளம்பர விகிதங்கள் மிக அதிகம். ஆகவே அவற்றின் விலைகள் மிகக் குறைவு.

இத்தகைய பெரும் வாசகர் கூட்டத்திலும் கலாச்சாரத்திலும்உண்டு கொழுக்கும் வியாபாரத்தின் ஆதிக்கம் இலங்கையின் தமிழ்க் கலாச்சாரத்தின் மீது, சுண்டங்காயின் மேல் பெரும் பாறுங் கல் இருந்தது போல அமுத்திக்கொண்டிருப்பதால், அது இயற்கையாகவே சகல சுதேச முன்னேற்றத்தையும் அமுக்கி விடுகிறது.

இவ்வாறாக, சுதேசி இலக்கியத்திற்கும் கலாசாரத்திற்கும் இந்தப் ''போட்டியில்'' தாக்குப்பிடிக்கவாய்ப்பே இல்லை, அவற்றைப் பொறுத்தவரை திரும்பத் திரும்பப் பிறந்த வீட்டிற்குள் சாகும் கதையாகவே இருந்து வருகிறது. உள்ள ஒரே நம்பிக்கை, விஷயத்தை நீதியின் சார்பாகவும் நமது தேசிய நலனின் சார்பாகவும் அவசியமான நிர்வாக நடவடிக்கை மூலம் தீர்ப்பதுதான்'

## அந்நிய செலாவணி மோசடி

இந்தத் தென் இந்தியப் பத்திரிகைகளின் இறக்குமதியிற் சம்பந்தப்பட்டுள்ள அந்நியச் செலாவணிப் பிரச்சினையும் கவனிக்கத் தகுந்தது. 20 லட்சம் ரூபாய்களுக்கு மேல் அந்நியச் செலாவணி நாட்டைவிட்டு வெளியே செல்கிறது என்பது ஒரு குறைந்த மதிப்பீடு. இலங்கையிலுள்ள சில இந்தியர்களின் செலாவணி மோசடிகளுக்கும் இப் பத்திரிகைகளின் இறக்குமதி உதவியாக உள்ளது.

தென் இந்தியாவிலிருந்து சுமார் 74 பத்திரிகைகள் இறக்குமதி செய்யப்படுகையில், ஒரே ஒரு சஞ்சிகை மட்டுமே இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் சென்று கணிசமான அளவு விற்பனையாகிறது. கதம்பம் என்ற பத்திரிகையின் ஆசிரியர் அடிக்கடி இந்தியாவிற்குச் சென்று, அங்கு மிக ஆடம்பரமாகச் செலவு செய்வதாக இந்திய தமிழ் சினிமாப் பத்திரிகை கூறுகிறது. இலங்கை அரசாங்கத்தின் பிரயாண, செலாவணிக் கட்டுப்பாடுகளிருக்கவும் இது எப்படி இவருக்குச் சாத்தியமாகிறது என இப் பத்திரிகை வினவுவதோடு, இந்திய-இலங்கை அரசாங்களின் அந்நிய செலவாணி இலாகாக்கள் இதை ஆராய வேண்டும் எனவும் கூறுகிறது.

இங்கிருந்து இந்தியாவிற்குச் செல்லும் ஒரே பத்திரிகையும் கூட நமக்குச் செலாவணியைக் கொண்டுவரவில்லை என இதிலிருந்து தோன்றுகிறது.

அத்துடன் கதம்பத்தின் ஆசிரியரும் ஒரு இந்தியரே. கதம்பம்ஈழத்தின் வாடையோ சாயலோ சிறிதுமற்ற ஒரு ஏடு. அது அனேகமாக முழுமையும் இந்திய சினிமாவிற்கே அர்ப்பணிக்கப்பட்ட ஏடு. அதில் எழுதுபவர்களும் இந்திய எழுத்தாளர்களே.. இவையும் கவனத்திற்குரியவை.

இந்தியாவிலிருந்து பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பேதா பேதமின்றி இங்கு வந்து குவிவதைத் தடுக்க

சென்றவாரத் தொடர்ச்சி

நடவடிக்கை வேண்டுமெனக் கோருகிறோம்.

## பத்திரிகையாளர் நிலைமை

தமிழ்ப் பத்திரிகையாளரின் நிலையும் மிக மோசமானது. இதில் நிருபர்களின் நிலை ஆகத் தாழ்ந்தது. இங்கும் வீரகேசரியே மோசமான ஸ்தானத்தை வகிக்கிறது. இவ் விஸ்தாபனத்தில் வேலை ஸ்திரமின்மை, குறைந்த சம்பளம், விதிக்கப்பட்ட சம்பள விகிதம் இன்மை ஆகியன நியதியாக உள்ளன. ஆசிரியர்கள் முதற்கொண்டு சகல ஊழியர்களும் 'கண்ட முறையில்' நடத்தப்படுகின்றனர். தினகரனிலிருந்து திரு. நாதன், வீரகேசரியிலிருந்து திரு. ஹரன், திரு. லோகநாதன், ஈழநாட்டிலிருந்து திரு. ராஜ அரியரத்தினம், சுதந்திரனிலிருந்து திரு. ஞானசுந்தரம் ஆகியோர் நீக்கப்பட்டது, அல்லது நிர்ப்பந்த நிலை காரணமாக வெளியேற நேர்ந்தது ஆகிய எல்லாம், ஆசிரியர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் உள்ள வேலை ஸ்திரமின்மையைக் காட்டுகின்றன. பத்திரிகையாளர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகள், அவர்கள் தமது திறமையை, முதலாளிகளின் சுயநலம் கலந்த கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, நாட்டு நலனுக்காகப் பிரயோகிக்கக் கூடிய முறையில், ஒரு சுதந்திர கமிஷனிடமோ, அல்லது எமது சங்கம் கூறியுள்ள ஆலோசனைகளின் பிரகாரமோ பாரப்படுத்தப் வேண்டும்.

## சாட்சியத்தின் சாராம்சம்

பத்திரிகைகள் வாயிலாக வகுப்புவாதம், இலங்கைத் தமிழ் பத்திரிகைகளில் இலங்கையரல்லாதார் கட்டுப்பாடு, தமிழ்ப் பத்திரிகைகள் வாயிலாக எமது மக்கள் மத்தியில் ஒருவித இந்தியப்-பற்று தத்துவத்திற்குப் பிரச்சாரம், இந்நாட்டிலுள்ள தமிழ் வாசகப் பொதுமக்கள் மீது இந்தியப் பத்திரிகைகளினதும், சஞ்சிகைகளினதும் செல்வாக்கும் அதிலிருந்து சுதேச இலக்கிய, கலாச்சார அபிவிருத்திக்குப் பிறக்கும் தீங்கும், பயனற்றறவையும் பாதகமானவையுமான இலக்கியங்களில் வீணாக்கப்படும் செலாவணி பற்றிய பிரச்சினை, பத்திரிகையாளர் மீது பத்திரிகை நிர்வாகங்களின் தன்னிச்சையான கட்டுப்பாடு ஆகியன, பெரும்பாலும் தமிழ்ப் பத்திரிகைகளின் தனிக் குணும்சமான பாரதூரமான தீமைகள் என்ற முடிவிற்கு வர எமது சாட்சியம் போதுமானது என நாம் நம்புகிறோம். எமது சங்கம் பொதுவாகப் பத்திரிகைகளின் சகல பகுதிகளையும் பற்றி எழுப்பிய விஷயங்களோடு, எமது சங்கம் கூறிய மார்க்கங்களில் நடவடிக்கை எடுப்பது தமிழ்ப் பத்திரிகைகள் சிறப்பான முறையில் நடக்க அவசியம் என நம்புகிறோம்.

---

# புரட்சியின் மூலமே புத்துலகம் படைக்க முடியும்

—4-ம் பக்கத் தொடர்

விட்டார்கள். பாராளுமன்ற வட்டாரத்திலும் எதிர்காலம் எப்படியாகும் என்பது தெளிவாயில்லை.

## பாராளுமன்ற தேர்தல் ஊழல்கள்

பாராளுமன்ற தேர்தலை நாம் உன்னிப்பாகக் கவனிப்போமானுல் இன்னுமொரு பரிதாபகரமான காட்சியைக் காணமுடியும். முதலாளித்துவ சமுதாயம் எப்படி ஊழல்கள் நிறைந்ததோ அப்படியே பாராளுமன்றத் தேர்தல்களும் ஊழல்கள் மலிந்த நிலையில் நடைபெறுகின்றன. பணத்தினுல் ஊழல்கள் நடைபெறுவதன் மூலம் பண மூட்டைகளே லாபத்தை அடைகின்றன. லஞ்சம் கொடுத்தல், உபசரித்தல், கள்ள வோட்டுப் போடுதல், பயங்காட்டுதல், தரங்கெட்ட முறையில் பேயுடனும் உறவு கொள்ளுதல், செய்யமுடியாத வாக்குறுதிகளைக் கொடுத்தல், சந்தர்ப்பவாதமாக போராட்டங்கள் வசதியற்றவை எனப் புறக்கணித்தல் ஆகியவையே பாராளுமன்றத் தேர்தலில் கடைப்பிடிக்கும் நடைமுறை வேலையாகும். ஒரு சோஷலிஸக் கட்சி தேர்தலில் வெற்றி பெற இப்படியான தந்திரங்களைக் கடைப்பிடிக்க முடியுமா? அப்படி ஏற்றுக் கொண்டாலும் பணத்துக்கு எங்கே போவது? ஆகவே பாராளுமன்றப் பாதை பணக்காரர்களின் பாதைதான். இது தொழிலாள வர்க்கத்தின் பாதையாக இருக்க மாட்டாது.

பாராளுமன்ற அதிகாரத்துக்காகச் செய்யும் முயற்சியும் ஒரு போராட்டமே என்று கருதப்படுசிறது; உண்மைதான். ஆனுல் இதுவே முழுப் போராட்டமுமல்ல; பாராளுமன்ற ரீதியாக அதிகாரத்துக்கு வருவது தொழிலாளிவர்க்கத்துக்கு முடியாத காரியம். அப்படி ஒன்று நடந்தாலும் ஆளும் வர்க்கத்தனர் தமது ஆட்சி யந்திரங்களினுல் அதனை நிர்மூலமாக்கி விடுவர் என்பது உறுதி' புரட்சிக் காரர்களால் பாராளுமன்றத்தில் ஒருவர் அல்லது இருவர் முயற்சியால் சிலவற்றை சாதிக்கவும் முடியும். பணம். நேரம், சக்தி ஆகியவை பெறுமதி வாய்ந்ததும் முக்கியமானவையுமாகும். ஆகவே இவற்றை பலம்தராத தேர்தல்களில் விரையம்செய்ய வேண்டியதில்லை. மிகவும் பயங்கரமானது என்னவென்றுல் பாராளுமன்றத்தின் மூலம் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்ற மயக்கத்தை உண்டுபண்ணுதலேயாகும்.

-ஜ௵

# காங்கிரஸின் ஜனநாயக விரோதக் கொள்கைக்கு இந்திய திரிபுவாதிகள் ஆதரவு

[இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் எதிரியான முதலாளித்துவ காங்கிரஸ் ஆட்சியின் ஜனநாயக விரோதக் கொள்கையை எதிர்த்தும், வங்க மக்களை வாட்டி வதைக்கும் பயங்கரமான உணவுப் பஞ்சத்தைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரியும், வெஞ்சிறையில் வாடும் பாட்டாளித் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும் இயக்கங்கள் நடத்திய காரணத்துக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கு வங்கக் கவுன்சிலை திரிபுவாதத் தலைமை கலைத்தது. அந்த இயக்கத்தில் கலந்து கொண்ட ஒரே காரணத்துக்காக தோழர் ஏ. கே. கோபாலன் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் துணிந்தனர். காங்கிரசுக்கு வால்பிடிக்கும் திரிபுவாதத் தலைமையின் இவ் வஞ்சக நாடகத்தை அம்பலப்படுத்தி, 'சிந்த' என்னும் மலையாள வார இதழில் வெளிவந்த செய்தியை வெளியிடுகிறோம்.]

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயும் வெளியிலும் சில மாதங்கள் கடுமையான சலசலப்பை உண்டாக்கியதும், தோழர் ஏ.கே.கோபாலன்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தூண்டியதுமான கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கு வங்கக் கவுன்சில் மீண்டும் நிறுவப்படும் பிரச்சினை இப்பொழுது ஓர் புதிய திருப்பத்தை அடைந்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியில் இடதுசாரிகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் தலைமையில் ஓர் மாகாண அமைப்புக் குழு அமைத்துக் கொண்டு மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைகளை தேசிய கவுன்சிலால் நேரில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. மாகாணக் கவுன்சிலின் பிரமுகத் தலைவர்களான முசபர் அகம்மத் ஜோதிபாசு, பிரமொத்தாஸ் குப்தா ஆகியோர் கைது செய்யப்பட்டவுடன்தான் தேசியக் கவுன்சிலால் இப்படியொரு பி. ஓ. சி. அமைக்கப்பட்டது. ஆனால் மாகாணக் கவுன்சில் அங்கத்தவர்களான சுமார் 36 தோழர்கள் வெளியில் இருக்கும் பொழுது அவர்களின் தலைமைக்கு மேல் ஓர் பி.ஓ.சி.யை கட்டி வைப்பதற்கு தேசியக் கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானத்தின் காரணம் அன்றைய தினம் தவறுகத் தோன்றியிருந்த போதிலும் இன்றைய தினம் அதன் ரகசியம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

## சீர்திருத்தவாத கொள்கைக்கு எதிராக...

காங்கிரஸ் சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையைஆதரிப்பதில் மும்முரமாக ஈடுபட்ட சீர்திருத்த வாதிகளையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் திரிபுவாதிகளாகக் காட்சி அளிக்கின்றவர்களின் கொள்கையை எதிர்த்தும் கட்சிக்குள்ளேயும் வெளியேயும் பல வருடங்களாகப் போராடி வந்தவர்கள்தான் வங்கக் கவுன்சிலில் பெருவாரியானவர்கள். அவர்களைத் தலைமையிலிருந்து மாற்றி, வங்கத்தில் கட்சியின் ஐக்கியமான சீர் திருத்தவாதத் தலைமையை நிலைநாட்டிக் கொண்டு, வங்கத்தின் பழைய தலைமையின் முகத்தில் கரி பூசிக் காட்ட வேண்டுமென்றும் எண்ணியிருந்தார்கள். இப்படிப்பட்ட செயலால் அவர்கள் கட்சியிலிருந்து தனிமைப் படுத்தப் பட்டார்கள்.

காங்கிரஸ் சர்க்காரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் தலைவர்களை விடுதலை செய்வதற்கான எந்தநடவடிக்கையையும்இந்த பி.ஓ.சி. எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, சிறைக் கோட்டத்தினுள் அவதிப்படும் தலைவர்களுக்கெதிராக தவறுன பிரச்சாரங்களையும் செய்து வந்தார்கள்.

இதனுல் அதிருப்தியடைந்த கட்சித் தோழர்களும் கமிட்டிகளும் பி.ஓ.சி-யின் தலைமைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து மாதங்கள்

## கம்யூனிஸ்ட் தலைவர்கள் விடுதலைகோரி
## மேற்கு வங்க ஜனநாயக கன்வென்சன்

சில கடந்துள்ளது. தோழர் ஜோதிபாசுவின் விடுதலைக்குப் பின் இந்தக் கோரிக்கை மேலும் தீவிரமடைந்தது மட்டுமின்றி, வங்க மாநில கவுன்சிலை மீண்டும் நிறுவ வேண்டுமென்று தீர்மானமெடுக்க கடந்த தேசியக் கவுன்சிலில் நிர்வாகக் கமிட்டி நிர்ப்பந்திக்கப் பட்டது.

பிப்ரவரி 3-10 க்கு தேசியக் கவுன்சில் செயற்குழு அங்கத்தினர்களான தோழர்கள் பூபேஷ் குப்தா, எம். என். கோவிந்தன் நாயர் ஆகியோரின் முன்னிலையில் கூடிய மாகாணக் கவுன்சில் அங்கத்தவர்களின் கூட்டத்தின் முடிவில் மேற்கு வங்க கவுன்சில் மறுபடியும் நிறுவப்பட்டிருக்கிறது. பி.ஓ.சி. சில தோழர்கள்மேல் எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளை அங்கீகரித்தல், தோழர் ஏ. கே. ஜி. கலந்து கொண்ட ஜனநாயகக் கன்வென்ஷனை கண்டித்தல் ஆகிய இரண்டு நடவடிக்கைகளை மாகாணக் கவுன்சில் எடுக்க வேண்டுமென்று தேசியக் கவுன்சில் கட்டளையிட்டதாக சொல்லப்படுகின்றது. மாகாணக் கவுன்சில் இந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ள வில்லை என்று தெரியவருகிறது. அவர்கள் ஜனநாயக கன்வென்ஷனைக் கண்டிக்காமல் தேசியக் கவுன்சில் எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று கோரியிருக்கிறுர்களென்றும் தெரிகிறது. இது வலதுசாரிகள் என்று சொல்லப்படுகிறவர்களை ஆத்திரமூட்டியதாகவும் அவர்கள் கவுன்சிலிலிருந்து வெளிநடப்புச் செய்ததாகவும் தெரியவருகிறது.

பயங்கரமான உணவுப் பஞ்சத்தால் பட்டினியில் மக்கள் வாடிக்கொண்டிருந்த நேரத்தில் அதைப்பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கபி.ஓ.சி. முயற்சி செய்யாமலும் தலைவர்களை விடுதலை செய்யக் கோரி எந்த இயக்கத்தையும் நடத்தாமலும், காங்கிரஸ் சர்க்காரின் ஜனநாயக விரோதக் கொள்கைக்கு மறைமுக ஆதரவு கொடுக்கும் தங்களின்

## தோழர் கோபாலன் சீரிய நடவடிக்கை

சீர் திருத்தவாதக் கொள்கையைக் கட்சிக்குள் புகுத்துவதற்கு கடுமையாக முயற்சித்த நேரத்தில் வங்கத்தில் பெருவாரியான கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் உணவுப் பஞ்சத்திற்கெதிரான போராட்டமும், காவலில் இருக்கும் தலைவர்களின் விடுதலை இயக்கமும் ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அங்கே ஜனநாயகக் கன்வென்ஷன் துவக்கப்பட்டதாகும். அதே சமயத்தில் அதிருப்தியடைந்த ஏராளமான தோழர்கள் தலைமையின் போக்கைக் கண்டித்து கட்சியிலிருந்து விலகிப் போவதற்குக் கூட அங்கு ஆலோசனைகள் நடந்ததாக சொல்லப் படுகிறது.

தங்களுடைய சீர் திருத்தவாதக் கொள்கையை எதிர்ப்பவர்கள் கட்சியிலிருந்து வெளியேறுவதில் பி. ஓ. சி. யும், அதை உருவாக்கிய தேசியக் கவுன்சிலும் கவலை கொள்ளவில்லையென்று தெளிவாகத் தெரிகிறது. ஆகையால் ஜனநாயகக் கன்வென்ஷனை வெளிப்படையாக எதிர்க்கவும், கலந்துகொண்டவர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை என்ற ஆயுதத்தைத் தொடுக்கவும் அவர்கள் அவசரப் பட்டார்கள்.

மேற்கு வங்கத்தில் பெருவாரியான கம்யூனிஸ்ட் தோழர்கள் கட்சியில் இருந்து சண்டை போட்டுப் பிரிந்து போவதைத் தடுப்பதற்காகத் தான் ஜனநாயகக் கன்வென்ஷனுடன் தோழர் ஏ.கே.ஜி. யுடையவும் அவரைப் போல் தேசியக் கவுன்சிலிலுள்ள சிந்திக்கும் திறனுடையவர்களுடையவும் திடமான அபிப்பிராயமென்று நினைக்கவேண்டும். ஆகையால்தான் அவர்கள் கன்வென்ஷனில் கலந்துகொள்ளத் தீர்மானித்ததாகவும் அங்குள்ள மக்கள் திட்டவட்டமாக நம்புகின்றனர். தோழர் ஏ. கே. ஜி. யின் அந்த வருகை நல்ல பலன் தரக்கூடிய நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாகவிருந்ததென்று துணிந்து கூறமுடியும். உணவுப் பஞ்சத்தை தடுப்பதற்கு சில தீவிர நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவும் காவலில் இருக்கும் தோழர்களை விடுதலை செய்வது பற்றி புனராலோசனை செய்வதற்கும், கட்சிக்குள் அதிகரித்து வரும் விலகும் போக்கைத் தடுக்கவும் தோழர் ஏ.கே.ஜி.யின் நடவடிக்கை மிகவும் பயனளித்தது. இதனுல் கட்சிக்கு மட்டுமல்ல, ஜனநாயக இயக்கத்துக்கும் நன்மை ஏற்பட்டதென்பதை சொல்லவும் வேண்டுமா?

ஆகையால்தான் தோழர் ஏ.கே.ஜி. மேல்ஒழுங்கு நடவடிக்கை எடுத்த தேசியக் கவுன்சிலின் தீர்மானத்தை இங்குள்ளவர்கள் கடுமையாக விமர்சனம் செய்கிறுர்கள்.

—நன்றி: செங்கொடி 18-3-64

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸசேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

★★★★★★★★★★★★★

வெளி வருகிறது!

★ கம்யூனிஸ்ட் ★

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவ சஞ்சிகை

ஆசிரியர்:
நா. சண்முகதாசன்

★★★★★★★★★★★★★★

# பெண் தொழிலாளர்க்கு சம்பள உயர்வு

## வெள்ளவத்தை ஆலையில் சி.டி.யு.எப். கோரிக்கை வெற்றி




இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், வெள்ளவத்தை நெசவாலையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கட்கு இரு முக்கிய கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளது.

1. 1-4-64 தொடக்கம் பெண் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 1/05 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2. சிங்கள-தமிழ் வருடப்பிறப்பிற்காக ஆண்களைப் போல் பெண் தொழிலாளர்கட்கும் விழா முற்பணம் பெற உரிமையுண்டு. இந்த முற்பணத்தில் ரூ. 25/-க்கு துணி வாங்கத் தொழிலாளர்கள் (ஆண்களும் பெண்களும்) அனுமதிக்கப்படுவர்.

இவை முக்கியமான வெற்றிகள். ஆனால் பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 1/05 ஆக உயர்த்தியதை ரூ. 1/15 ஆக உயர்த்த வேண்டும் என்ற எமது கோரிக்கையைப் பூர்த்தி செய்வதாக இல்லை. இக் கோரிக்கை தொழில் கோட்டு முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

தொழில் கோட்டில் விவாதிக்கும் போது முந்திய சங்கங்களின் ஒப்பந்தங்களிலுள்ள தீர்ப்புகளும் உடன் படிக்கைகளும் சில இன்னும் அமுல் நடத்தப்பட வில்லை என்று தெரியவருகிறது. 30-6-45-ல் திரு. நடராசாவின் தீர்ப்பின்படி, எல்லாப் பெண் தொழிலாளர் கட்கும் நாளுக்கு 75சதமாக சம்பளம் உயர்த்தப் பட்டிருக்க வேண்டும். அதன் பின்பு, டாக்டர் என்.எம். பெரேராவின் தலைமையில் அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கமும் என். ஐ. கிரியல்லையின் தலைமையில், வெள்ளவத்தை நெசவாலை ஐக்கிய தொழிலாளர் சங்கமும் கம்பனி முதலாளிமாருடன் பேச்சுவார்த்தை நடத்தி, எல்லோருக்கும் நாளுக்கு 12சதம் கூட்டுவதெனத் தீர்மானிக்கப் பட்டது. இதன் மூலம், பெண் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 87 சதமாக உயர்ந்திருக்க வேண்டும்.

இதன் பின் 9-2-59-ல் கம்பனிக்கும் சமசமாஜ சங்கத்துக்கும் ஏற்பட்ட உடன் படிக்கையின் பயனாக, எல்லாத் தொழிலாளர் கட்கும் 10% விகிதம் சம்பளம் உயர்த்தப்பட்டது. இதனால் பெண் தொழிலாளர்களின் சம்பளம் 95 சதமாக உயர்ந்தது. 30-7-62-ல் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் மூலம் மேலும் 10% விகிதம் உயர்த்தப்பட்டது. இதனால் பெண் தொழிலாளரின் சம்பளம் ரூ. 1/05 ஆக உயர்ந்திருக்க வேண்டும்.

ஆனால் நடைமுறையில் பெண் தொழிலாளர்கள் 96 சதம் தான் பெற்றனர். இதில் ஒரு பகுதியினர் (18வயதிற்குக் குறைந்தவர் என்று கூறப்படுவோர்) 86 சதம் பெற்றனர். எந்த ஒரு ஒப்பந்தமோ, தீர்ப்போ, இந்தப் 10 சத வித்தியாசத்தை நியாயமானதாகக் கருதியதில்லை என்பது தெரியவந்தது.

சி. டி. யூ. எப். காலடி எடுத்து வைக்குமுன் இருந்த சங்கங்கள் தீர்ப்புகளையும் உடன் படிக்கைகளையும் அமுல் நடத்துவதில் கவனம் செலுத்தவில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. இந்த உண்மைகளைக் கம்பனி முதலாளி மார்கட்கு எடுத்துக் காட்டியதும் அவர்களால் எந்தப் பதிலும் கூற முடியாமல் கடைசியாக எல்லாப் பெண் தொழிலாளர் கட்கும் (18 வயதுக்குக் குறைந்தவர் உட்பட) 1-4-64 தொடக்கம் நாளுக்கு ரூ. 1/05 ஆக உயர்த்தச் சம்மதித்தனர். இரண்டு வருட பின் பணமும் கொடுக்கச் சம்மதித்தனர். இந்த உயர்வு, பிரமாண ஊதியம் (பீஸ்-றேற்) பெறுபவர்கட்கும் கொடுக்கப்படும்.

ஆனால் சங்கத்தின் கோரிக்கையான, பெண் தொழிலாளர் கட்கு ரூ. 1/15 சம்பள உயர்வை நாம் கைவிட்டதாகவோ, எமது வேறெந்தக் கோரிக்கையையும் கைவிட்டதாகவோ அர்த்தமில்லை. இவை தொழிற் கோட்டில் தொடர்ந்து விவாதிக்கப்படும். சில தவறுகள் திருத்தப்பட்டது மட்டுமே இப்போது நடைபெற்றது.


# அரசாங்க அளவு பஞ்சப்படியை உடனே கொடு!

### சினிமா ஊழியர்களின் கோரிக்கைகள் பற்றி சங்கக் காரியதரிசி பேட்டி

இலங்கை சினிமா, பிலிம் ஸ்ருடியோ சேவையாளர் சங்கத்தின் 1963-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற வருடாந்திரக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 20 கோரிக்கைகள் முதலாளிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென சங்கக் காரியதரிசி தோழர் செனிவிரத்தின அவர்கள் தொழிலாளி நிருபரிடம் கூறினர்.

இக் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறிப் பின்வருமாறு விளக்கம் தந்தார்;

சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள சகல ஊழியர்களும் உட்படக் கூடிய பொதுவான சம்பள உயர்வுக்குரிய பொதுத் திட்டமொன்றை ஏற்படுத்தல்; சினிமா, பிலிம் தொழிலில் ஈடுபட்டுள்ள சகல பிரிவிலுமுள்ள ஊழியர்களுக்குப் பொதுச் சம்பள உயர்வுத் திட்டமொன்றை ஏற்படுத்தல்; சகல ஸ்தாபனங்களிலும் பொது நிர்வாக விதிகளை ஏற்படுத்தல்; சகல கிளைக் காரியதரிசிகளுக்கும் தொழிற் சங்க கூட்டங்களுக்கு வருகை தருவதற்காக உத்தியோக லீவு வழங்குதல்; தங்களது குடியிருப்புக்குப் பக்கத்தில் வேலை கொடுத்தல்; சங்க சந்தாத் தொகையை சம்பளத்தில் கழித்து தலைமைச் சங்கத்திற்கு அனுப்பிவைத்தல்; தலைமைச் சங்கத்தினதோ, கிளைச் சங்கத்தினதோ வருடாந்தக் கூட்டங்களை சினிமாக் கொட்டகைகளினுள் நடத்துவதற்கு வசதி செய்து கொடுத்தல்; மே தினங்களில் சினிமாக் கொட்டகைகளை மூடுதல்; கிளைத் தலைவர்கள் சங்க விவகாரங்களின் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுவதை அனுமதித்தல்; வேலைகளிலிருந்து தடுத்து வைக்கும் காலங்களுக்கு பாதிக்கப்பட்ட சகல ஊழியருக்கும் அரை மாதச் சம்பளம் வழங்கப்படுதல்; நடுச்சாமக் காட்சிகளின் போது கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் மேலதிக நேரச் சம்பளத்திற்குக் கூடுதலாக ரூபா 2/50 கொடுக்கப்படுதல்; தேசிய சமய கொண்டாட்டங்களுக்கு விடுமுறைகள் அவரவர் தேவைக்கொப்ப வழங்குதல்; சினிமாத் தொழிலாளர் சேமநலச் சங்கத்திற்கு ஒவ்வொரு ஸ்தாபனத்தாலும் ஒவ்வொரு படக்காட்சியை இலவசமாக வழங்குதல்; இச் சங்க நிதியை சம்பளத்தில் கழித்து அனுப்பி வைத்தல்; வெளிப் பிரதேசங்களுக்கு மாறிச் செல்லுபவர்களுக்கு வீட்டு வசதி, அல்லது வாடகை ரூ 37/50 வளங்குதல் போன்ற கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.



எம். எம். செனிவிரத்தின
பொதுக் காரியதரிசி,
சினிமா, பிலிம் ஸ்டூடியோ
சேவையாளர் சங்கம்.

அவர் மேலும் கூறியதாவது: தொழிற் கோட்டின் தீர்மானப்படி சகல சினிமா ஊழியர்களுக்கும், 1-1-62-ந் திகதியிலிருந்து செல்லுபடியாகக்கூடிய அரசாங்கப் பஞ்சப்படியை கொடுக்கவேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. (சினிமா ஊழியர்களுக்கு அரசாங்கப் பஞ்சப்படி கிடைக்க வேண்டுமென தொழில் கோட் கொடுத்த தீர்ப்புக்கு எதிராக தொடுத்த அப்பீல் வழக்கை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்த படியினல் இக் கோரிக்கைகள் இவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும்.)

—நமது நிருபர்

பண்டாரவளை

### சி. டி. யூ. எப்.பில் திரளும் நகரசுத்தித் தொழிலாளர்

பண்டாரவளை நகரசபையின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்கள் யாவரும் சி. டி. யூ. எப். பின் கீழ் உள்ள பொதுத் தொழிலாளர் சங்கத்தில் சேருவதெனக் கடந்த 27-ம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெற்ற தமது கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

"21 கோரிக்கைகளை வென்றெடுக்கச் சகல தொழிலாளர்களும் ஒரு கொடியின் கீழ் அணிதிரண்டுகொண்டிருக்கும் இவ் வேளையில் பண்டாரவளை நகரசுத்தித் தொழிலாளர்களும் இதில் சேர முன்வந்திருப்பது மிகவும் வரவேற்கப்பட வேண்டியது எனவும், குறிப்பாகத் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தச் சில திரிபுவாதிகள் நாச வேலையில் ஈடுபட்டிருக்கும் இந் நேரத்தில் நகரசுத்தித் தொழிலாளர்கள் சி. டி. யூ. எப்.பில் சேரத் தீர்மானித்திருப்பது சி.டி.யூ.எப். தொழிலாளர்களுக்கு அளித்துவரும் சிறந்த தலைமைக்கும், அதன் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது எனத் தொழிலாளர் மத்தியில் பேசிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஊவா பொதுப் பிரதிநிதி தோழர் கரவை கந்தசாமி குறிப்பிட்டார்.

மேலும் தோழர்கள் ஆறுமுகம், வேலு ஆகியோர் சங்க அமைப்புச் செயலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். தோழர்கள் கொலின் எஸ்.டி.சில்வா, விக்டர் சில்வா ஆகியோர் தொழிலாளர்கள் மத்தியில் பேசினர்.

**படிக்கத் தவருதீர்கள்!**

**தோழர் சண்முகதாசன்**

எழுதிய

★ தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது எப்படி?

★ லெனினிஸமும் நவீன திரிபுவாதமும்

கிடைக்குமிடம்: இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.

# சன்ஸிபாரில் உதித்த புரட்சி ஞாயிறு

## ஆபிரிக்காவின் ஒளிவிளக்கு

## ஏகாதிபத்தியத்திற்கு மரணகீதம்

ஜனவரிப் புரட்சிக்குப் பின் சன்ஸிபாரைப் பற்றி உலக மக்கள் மேலும் அறிந்துள்ளனர். தென் ஆபிரிக்காவின் கிழக்குக் கரையில் 2600 சதுர கிலோ மீட்டர் விஸ்தாரமுள்ள தீவுப்பிரதேசம் சன்ஸிபார். இதன் சனத்தொகை 315,000. உலகத்தின் 80 சதவிகித கராம்பு உற்பத்தி செய்யும் நாடு சன்ஸிபார் என்பதைத் தவிர வேறெந்த விபரமும் இதற்குமுன் பகிரங்கமானதில்லை. ஆனுல் இன்று சன்ஸிபார் என்று சொல்லாதார் உலகிலில்லை. சன்ஸிபார் சுல்தான் இங்கிலாந்திற்கு ஓடிச்சென்றுவிட்டார். ஏகாதிபத்திய கப்பற் படைகள் சன்ஸிபார் கடலோரங்களை விட்டகன்றன. அமெரிக்க, பிரித்தானிய ஸ்தானிகர்கள் நாட்டிலிருந்து விரட்டப்பட்டனர். ஜனுதிபதி அபெய்ட் அமன் கறூம் சன்ஸிபார் பிரகடனம் ஒன்று விடுத்துள்ளார்.

பலகாலமாக அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட கிளர்ச்சிதான் சன்ஸிபார் புரட்சி. இப் புரட்சி சன்ஸிபார் மக்களின் பூரண ஆதரவைப் பெற்றது. முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் அடக்குமுறைகளைத் தகர்த்தெறிவோம் என அவர்கள் சபதம் செய்துள்ளனர். புரட்சியின்வெற்றிகளைப் பாதுகாத்து மேலும் முன்னேறிச் செல்வோம் என அப் பிரகடனம் கூறுகிறது.

காலனி ஆதிக்க காலத்தில் நிலத்தில் 80சதவிகிதம், ஜனத்தொகையில் 13 சத விகிதத்தினருக்குச் சொந்தமாயிருந்தது. 50,000 மக்கள் கூடியிருந்த மாபெரும் கூட்டத்தின் நீண்ட கரகோஷங்களுக்கு மத்தியில், எல்லா நிலபுலன்களும் தேசியமயமாக்கப்படுமென ஜனுதிபதி கறூம் கூறினுர். முதலாளித்துவ சுரண்டல்காரர்களிடமிருந்த தோட்டங்களும் இனரீதியான கிளப்புகளும் தேசியமயமாக்கப்படும். ஏகாதிபத்தியவாதிகள் இனரீதியாக மக்களைப் பிரித்து வைத்துத் தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து மக்களைத் திசைதிருப்பித் தமது ஆதிக்கத்தைச்செலுத்தி வந்தனர். ஆதலால், இனிமேலும் இன வேற்றுமைகளுக்கு இடமளிக்காது சகல மக்களும் ஒற்றுமையுடன் முன்னேற வேண்டுமென ஜனுதிபதி கூறினுர்.

சன்ஸிபார் மக்களின் வெற்றி, ஆபிரிக்க மக்கள் விழிப்புற்று விட்டனர் என்பதற்கு இன்னுமோர் சான்று. சுல்தான் ஆட்சியிலும், பிரித்தானியக் கம்பெனியாரின் ஆட்சியிலும் பட்ட அவஸ்தைகளை மக்கள் மறக்கமாட்டார்கள். புரட்சி இல்லாமல் தமக்கு விமோசனப் பாதை வேறெதுவுமில்லைஎன்பதைசன்ஸிபார் மக்கள் நன்கறிவர்.

ஆபிரிக்காவிலுள்ள சகல மக்களும், உலகிலுள்ள மக்கள் யாவரும் சன்ஸிபார் புரட்சியை வரவேற்றனர்; வாழ்த்தினர். மறுபுறம் ஏகாதிபத்தியவாதிகள் ஆத்திரமும் அசூயையும் கொண்டனர். புரட்சி அவர்களை அதிர்ச்சியடையச் செய்தது. அதை அவர்கள் முற்ருக வெறுத்தனர். புரட்சியை முறியடிப்பதற்குப் பயமுறுத்தல், தலையிடுதல், ஆக்கிரமிப்பு ஆகிய முறைகளை ஏகாதிபத்திய வாதிகள் கையாண்டனர். ஆனுல் சன்ஸிபார் அரசாங்கம் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பணிய மறுத்துவிட்டது. சன்ஸிபார் பிரகடனம் இவர்களுக்கு நல்ல பதில் கொடுக்கிறது.

ஏகாதிபத்தியவாதிகள், கலோனியல்-நவ கலோனியல் வாதிகள், சன்ஸிபார் மக்களை மறுபடியும் அடிமைப்படுத்தும் முயற்சிகளைக் கைவிடப் போவதில்லை. சன்ஸிபார் மூலம் ஆபிரிக்க மக்களைச் சுரண்டியவர்கள் இவர்கள். ஏனென்ருல் சன்ஸிபார் துறைமுகம் இவர்களுக்கு வசதியான ஓர் ஸ்தானமாக இருந்தது. கலோனியல் அடிமை வியாபாரிகள் இத் துறைமுகத்தைப் பாவித்தனர். அடிமை வியாபாரிகளின் வழித்தோன்றலான ஏகாதிபத்திய வாதிகள் சும்மா விடமாட்டார்கள். நவீனகாலனி ஆதிக்கத்தைச்செலுத்த முயல்வார்கள்.

சரித்திரத்திலும், இன்றைய யதார்த்த நிலையிலும் சன்ஸிபார் மக்கள் இதை நன்கறிவர். ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம் அவர்களைப் பொறுத்த மட்டில் இன்னும் முற்றுப்பெறவில்லை.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட புரட்சிகரத் தொழிற் சங்க சம்மேளனம் விடுத்த ஓர் பிரகடனம் அமெரிக்க ஏகாதிபத்தியம், அமெரிக்க மூலதனம் ஆகியவை மக்களின் பயங்கரமான எதிரிகள் என்று கூறுகிறது. ஏனைய நாடுகளில் செய்வதுபோல் எமது நாட்டிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அநியாயச் செயல்களில் ஈடுபடும் என்று இப் பிரகடனம் கூறுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆயுதங்களுடன் போரிட வந்தால் நாமும் ஆயுதம் தாங்கிப் போரிடுவோமென சுவாகிலி மொழியில் வெளிவரும் குவேப் (உதயம்) என்னும் பத்திரிகை கூறுகிறது.

மக்களின் சக்தியில் நம்பிக்கை வைத்துத் தேசிய ஒற்றுமையை வளர்த்து, எந்தக் கஷ்டத்தையும் சன்ஸிபார் மக்கள் குடியரசு சமாளித்து முன்னேறும் என்பது திண்ணம்.

—பீக்கிங் றிவியூ

# மங்கா விளக்கேற்றிய மார்க்ஸ்

மக்கள் நாம்வாழ வழிவகுத்த மார்க்சுக்கு
மட்டில்லா மரியாதை தான்செலுத்தி—களங்கமிலா
நெஞ்சத்தான் வான்புகழ் என்றென்றும் நின்று
மறையா வளர்வதற்கு வாழ்த்துவோம்.

தான்கண்ட துன்பங்கள் துயர்துடைக்க என்றெண்ணி
தான்கண்ட இன்பங்கள் பொதுவாக்கி—எல்லாம்
எல்லார்க்கும் பொதுவென்ருர் நாம்பிறந்த நன்னுடு
என்றும் நமக்கென்ருர் தன்னலமில்லாதவர்.

காலமெல்லாம் நூல்நிலையம் கழித்திட்ட கால்மார்க்ஸ்
கண்டார் கண்திறந்தார் கண்ணீர்தான்—போக்க
பாரிலுள்ளோர் படித்துப் பலன்பெறவே அன்று
படைத்து விட்டார் ''பொதுவுடமை நூல்''

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆவீர்கள்
ஒருவரும் ஒருவர்க்கும் பணியாதீர்—தொழிலாளி
பணிவதனுல் பயனில்லை சமத்துவமே என்றும்
பெரியதென்றே சாற்றினுர் உண்மைதனை.

வாழ்த்துவந்த காலத்தில் வறுமைதான் வாட்டிடவும்
வலியவர் மெலியவரை வாட்டிடவா?—என்றெண்ணி
வறுமைக்கும் அஞ்சாது பொறுமைதனை வைத்து
வாழவழி வகுத்து விட்டார் மார்க்ஸ்.

புரட்சிதனைக் கொண்டு உடமைகளைப் பொதுவாக்கி
பொதுமக்கள் கண்டிடுவீர் இன்பங்கள்—என்றிட்ட
மனிதத் தெய்வமாம் கால்மார்க்ஸை வாழ்த்தி
மங்கா விளக்கினை நாம் ஏற்றிடுவோம்.

—வே. அரியரத்தினம் பொன்னுத்துரை

### 21 கோரிக்கைகளுக்காகப் போராட

# வர்க்கரீதியில் ஐக்கியமுறுவீர்!

## தோட்டத்தொழிலாளர் மத்தியில் தோழர் தர்மதாஸா உரை

“தோட்டத் தொழிலாளர்கள் ‘புரட்சி வாழ்க’, ‘புரட்சியே எமது பாதை’ எனக் கோஷங்கள் எழுப்புவதோடு நின்றுவிடாது, புரட்சி என்ருல் என்ன, புரட்சியை எப்படி நடத்துவது, என்பவற்றை நன்கு உணர்ந்து போராட்டத்திற்குத்தயாராக வேண்டும்'' என இலங்கை கம்யூனிஸ்ட், முற்போக்கு வாலிபர்சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி தோழர் தர்மதாசா ஹட்டன்மாவட்ட சாமிமலையைச் சேர்ந்த சின்ன சூரியகந்தை தோட்டத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த செங்கொடிச் சங்கக் கூட்டத்தில் கூறினுர். தோழர் ஓ. ஏ. இராமையா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு முன் நீண்ட ஊர்வலம் நடைபெற்றது.

தோழர் தர்மதாசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இலங்கையில் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியமே கிடைக்கின்றது. அவர்களுக்கு விஷேச பஞ்சப்படி ரூ. 17-50 கிடைக்கவில்லை. மெடிக்கல் லீவு கிடையாது, கொழும்பிலுள்ள தொழிலாளர்கட்குக் கிடைக்கும் மற்றச் சலுகைகளும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வில்லை.

நமது இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் முயற்சியால் ஐக்கிய தொழிற்சங்க கமிட்டி ஏற்படுத்தப்பட்டு, 21 கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்ருேம். இக் கோரிக்கைகளின் வெற்றிக்காகத் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் போராட்டம் செய்யத் தயாராக வேண்டும்.



தோழர் டபிள்யூ. ஏ. தர்மதாஸா
[பொதுச் செயலாளர், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம்]

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓட்டுரிமை இல்லாததால் திரிபுவாதிகளான கெனமன் கோஷ்டியினர் தோட்டத் தொழிலாளர் களுக்காகப் போராடத் தயாராயில்லை. பாராளுமன்ற ஆசனங்களே தஞ்சமென வாழும் கெனமன் கோஷ்டியினர் எப்படி வாக்குரிமையற்ற தொழிலாளர்களுக்காகப் போராடமுடியும்? அன்று தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்த குணசிங்கா போல் இன்று கெனமன்-மெண்டிஸ் கோஷ்டியினர் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கின்றனர். குணசிங்காவை உதறித் தள்ளியது போல் கெனமன் கோஷ்டியினரையும் தொழிலாள வர்க்கம் உதறித் தள்ளிவிட்டது.

அவர் தொடர்ந்து பேசுகையில், சிங்களத் தொழிலாளர்களும் தமிழ்த் தொழிலாளர்களும் வர்க்க ரீதியில் ஒன்றுபட்டு, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே, ஆயுதந்தாங்கி மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் கோட்பாடுகளுக்கிணங்க புரட்சிகரமான போராட்டம் நடத்தித்தான் இந்நாட்டிலே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முடியும் எனக் கூறினுர்.

தோழர் ரொசாரியோ பெர்ணண்டோ உட்பட மற்றும் பலர் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.